**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC .NO. 39/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W–1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணகுகன் | தொழில் | : | சுயதொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிருஷ்ணசாமி | ஜாதி | : | – |
| கிராமம் | : | திருப்பூர் | இனம் | : | ஆண் |
| தாலூக்கா | : | திருப்பூர் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 11.10.2023.

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

1. நான் எனது புகாரில் எனது விலாசத்தில் கே.செட்டிபாளையம் என்பது திருப்பூர் வட்டத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது ஆதார் அடையாள அட்டையில் இந்த புகாரிலுள்ள சொல்லியுள்ள விலாசம் கிடையாது. எனது ஆதார் அடையாள அட்டையின் திருப்பூரிலுள்ள எஸ்.ஆர்.நகரை தான் விலாசமாக காட்டியுள்ளேன். ஆதார் அட்டையை எந்தவருடம் வாங்கினேன் என்றால் 2012ம் ஆண்டுக்கு முன்பாக வாங்கினேன். நான் எனது புகாரில் சொல்லியுள்ள முகவரியில் குடியிருந்து வந்தேன் என்பதை காட்ட ஆவணம் ஏதேனும்

வைத்துள்ளேனா என்றால் இல்லை. புகாரில் சொல்லப்பட்டுள்ள எனது முகவரிக்கும், எனக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கடந்த 2018 ம் ஆண்டு நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் விவசாய தொழிலும், நூல் வியாபார தொழிலும் செய்து வந்தேன். எந்த முகவரியில் என்ன பெயரில் நூல் வியாபார தொழில் செய்து வந்தேன் என்றால் அதற்கு முகவரி கிடையாது, எனது பெயரில் தொழில் செய்து வந்தேன். நூல் வியாபாரம் செய்வதற்கு உரிமம் பெற்றிருந்தேனா என்றால் இல்லை.

2. எதிரியை எனக்கு நூல் வியாபாரம் செய்த வகையில் பழக்கம் ஆனவர். எதிரி நூல் வியாபாரம் செய்து வருகிறார். எதிரி என்ன பெயரில், எந்த ஊரில் நூல் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் வெள்ளகோவிலில் நூல் வியாபாரம் செய்து வருகிறார், அதன் முகவரி எனக்கு தெரியாது. எதிரிக்கு ரூ.10,00,000/-ஐ எதற்காக கொடுத்தேன் என்றால் அவருடைய பழைய கடனை அடைப்பதற்கும், குடும்ப தேவைகளுக்காகவும் தேவைப்படுவதாக கேட்டதன் பேரில் கொடுத்தேன். நான் எதிரி மீது நம்பிக்கையின் அடிப்படையில் தான் கடன் கொடுத்தேன். நான் கொடுத்த கடனுக்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலை தவிர வேறு ஆவணம் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. எதிரிக்கு என்ன சொத்து உள்ளது என்றும், அவருக்கு நிரந்தர வருமானம் என்ன என்று எனக்கு நேரடியாக தெரியாது. எதிரியின் வீடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. எதிரியின் வீடு,வெள்ளகோவிலில் உள்ள கடை விலாசமும் தெரியாத நிலையில் நான் எதன் அடிப்படையில் எ திரிக்கு ரூ.10,00,000/-ஐ கடனாக கொடுத்தேன் என்றால் நூல் வியாபாரம் செய்த வகையில் நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன்.

3. நான் திருப்பூரில் தான் வசித்து வருகிறேன். ஆனால் திருப்பூரில் உள்ள வங்கிகளில் எனக்கு வங்கி கணக்கு கிடையாது. நான் திருப்பூரில் வைத்து தான் நூல் வியாபாரம் கமிசன் அடிப்படையில் தொழில் செய்து வருகிறேன். திருப்பூரில் உள்ள வங்கிகளில் வங்கி கணக்கு வைக்காமல் வெள்ளகோவிலில் உள்ள வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளதற்கான காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் எனக்கு நிலம் வெள்ளகோவிலிருந்து 8 கி/மீட்டரில் உள்ளதால் நான் வெள்ளகோவில் வங்கியில் கணக்கு வைத்தேன். நான் வெள்ளகோவில் கரூர் வைசியா பேங்கில் கணக்கு வைத்துள்ளேன். நான் கடந்த 2013ம் ஆண்டில் மேற்படி வங்கியில் கணக்கு துவக்கினேன். நான் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேனா என்றால் 2010-2011ம் ஆண்டு வரை வருமான வரி செலுத்தியிருந்தேன், தற்போது வருமான வரி செலுத்துவது இல்லை.

4. எனக்கு இந்த புகாரில் கண்ட கடன் தொகையான ரூ.10,00,000/-ஐ கடனாக கொடுக்கும் அளவிற்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு போதிய வசதி வாய்ப்பு இருந்துவருகிறது என்பதை காட்ட அது சம்மந்தப்பட்ட ஆவணம் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் புகாரில் காட்டியுள்ள எனது முகவரியில் நான் வசித்து வந்ததே கிடையாது என்றும், வேறு ஒரு நபர் வசித்து வரும் விலாசத்தை காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் நூல் வியாபாரம் செய்து வருவது பொய் என்றும், அதுபோல் எதிரி நூல் வியாபாரம் செய்து வருகிறார் என்று சொல்வது பொய் என்றும்

எதிரி விவசாய தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரி படிக்காதவர் என்பதால் அவருக்கு தொழில் எதுவும் தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த புகாரை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–C. செந்தில் குமார்,
நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.